பக்கங்கள் 12

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 20 சனிக்கிழமை 05.08.2023 அதிர்வு 05

## கெஹலியவை பதவி விலக குடும்பத்துக்குள் அழுத்தம்!



அமைச்சப் பதவியில் இருந்து விலகுமாறு ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் கோரிக்கை எதை யும் விடுக்கவில்லை 04

# மலையகத் தமிழ் எம்.பிக்களை ஒன்றாகச் சந்திக்கிறார் ரணில்

மலையகத் தமிழ் நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று அடுத்தவாரம் இடம்பெறவுள்ளது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய வந்துள்ளது. 04



## பல்கலை. மாணவர்கள் ஏற்பாட்டில் சுழிபுரத்தில் கவனவீர்ப்புப் பேரணி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யத்தின் ஏற்பாட்டில் இன்றைய தினம் சுழிபுரத்தில் போராட்டமொன்று இடம்பெற்றது.

போராட்டத்தை தொடர்ந்து சுழிபுரம் சந்தியில் இருந்து பாறளாய் முருகன் ஆலயத்தை நோக்கி பேரணியும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் – சுழிபுரம் பறாளாய் முருகன் ஆல யத்தில் உள்ள அரச மரத்தைச் சங்கமித்தை நாட்டிய மரம் எனக் குறிக்கும் விதத்தில் வெளியிடப்பட்ட அரச வர்த்தமானி மீளப்பெறப்படவேண்டும் என 04

## காரில் பயணித்தவர் மீது திடீரெனத் துப்பாக்கிச் சூடு

கம்பஹா, வெலிவேரிய, அம்பறலுவ வீதி, ஜுபிலி மாவத்தை பகுதியில் இன்று காலை காரில் பயணித்தவர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இரு வர் திடீரெனத் துப்பாக்கி சூட்டை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டை நடத் திய இருவர் மோட்டார் சைக் கிளை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு சிறிய லொறியில் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் உடுகம் பொல, மொடல்கமுவ 04

## தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவை மீள ஆரம்பிக்கும்



தலைமன்னார் – இராமேஸ் வரம் கப்பல் சேவையை விரை வில் நடத்தும் நோக்குடன் துறை முகங்கள் கப்பல் சேவை மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா நேற்று வெள்ளிக் கிழமை தலைமன்னார் 04

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA

- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS

KELSEY HOMES
40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS




CENTRALPARK JA-ELA

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

# காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் இரும்புத் திருட்டில் ஈடுபட்ட 20 பேர் கைது



யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் இருந்து இரும்புகளைத் திருடிய குற்றச்சாட்டில் 8 பெண்கள் உட்பட 20 பேரைப் பொலிஸார் நேற்றைய தினம் கைது செய்துள்ளனர்.

காங்கேசன்துறைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

நேற்று சீமெந்துத் தொழிற்சாலைக்குள் அத்துமீறி நுழைந்த 20 பேர் கொண்ட கும்பல் அங்கு திருட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை அங்கு விரைந்து சென்ற பொலிஸார் அவர்கள் அனைவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பிரதேச வாசிகள் இரும்பு திருட்டில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் , கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் சுமார் 12 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய இரும்புகள் திருடப்பட்டுள்ளன எனவும் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜகத் தர்மபிரிய அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தினால் இன நல்லிணக்கமும் முழுமையாக ‘அவுட்’!

## விமல் வீரவன்ஸவின் கண்டுபிடிப்பு இது!

13 ஆவது திருத்தச்சட்டத்தை பொலிஸ் அதிகாரத்துடன் முழுமையாக நடைமுறைப்படுத்தினால், வட மாகாணத்தில் முற்றாக மத சுதந்திரம் இல்லாது போய்விடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நிறைவேற்றுதால் மட்டும், நாட்டிலுள்ள இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்திவிட முடியாது.

மாகாணசபைகளுக்கான அதிகாரம் முழுமையாக வழங்கப்படாத நிலையிலேயே, யாழ், திஸ்ஸ ரஜமகா விகாரையில் சமயக்கிரியைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளது.

இந்த நிலையில், பொலிஸ் அதிகாரத்தை வழங்கினால் வடக்கில் ஒருபோதும் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது போய்விடும்.

கொழும்பில் இந்துமத கிரியைகளை மேற்கொள்ள எந்தத் தடையும் கிடையாது. இங்கு தடையின்றி வேலை சுமந்துக் கொண்டு வீதி ஊர்வலம் செல்லலாம். யாரும் அதற்கு எதிர்ப்பை வெளியிட மாட்டார்கள்.

எனினும், யாழில் தங்களுக்கு விரும்பிய மதங்களை வழிபட முடியாத நிலைமையே உள்ளது. இப்படியான அடிப்படைவாத சிந்தனைக் கொண்ட அரசியல்வாதிகள் உள்ள மாகாணத்திற்கு பொலிஸ் அதிகாரத்தை முழுமையாக வழங்கினால், இப்போது இருக்கும் நல்லிணக்கமும் இல்லாது போய்விடும். - என்றார்.

# புத்தளம் - அ’புர வீதியில் காட்டு யானைக் கூட்டம்!



புத்தளம் – அநுராதபுரம் வீதியின் 6 ஆம் கட்டைப் பகுதியில் நேற்று மாலை முப்பதுக்கும் அதிகமான காட்டு யானைகள் சஞ்சரித்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

அந்த வீதியால் செல்லும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்கள் தமது வாகனங்களை நிறுத்தி யானைகள் சஞ்சரிக்கும் காட்சியை பார்த்துச் சென்றனர்.

இந்தக் காட்டு யானைகள் இரவு நேரத்தில் வீதியைக் கடந்து கிராமங்களுக்குள் வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் இந்தப் பகுதியிலுள்ள மக்கள் இரவு வேளைகளில் தாங்கள் மிகுந்த அச்சத்திற்கு மத்தியில் வெளியே செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

# நீர்த் தொட்டிக்குள் விழுந்து 3 வயதுக் குழந்தை மரணம்




கம்பஹா மாவட்டம், வத்தளைப் பிரதேசத்தில் நேற்று மாலை தண்ணீர்த் தொட்டிக்குள் விழுந்து மூன்று வயது ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை திடீரெனக் காணாமல்போயுள்ளது.

பெற்றோர் குழந்தையைத் தேடியபோது குழந்தை நீர் நிரம்பிய தொட்டிக்குள் விழுந்து கிடந்துள்ளது.

குழந்தையைப் பெற்றோர் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போதிலும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்தது.

# இலங்கை வைத்தியரைப் பணியில் இணைக்கும் வெளிநாடுகளிடம் நஷ்டஈடு கோர வேண்டும்



## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு

இலங்கை வைத்தியர்களைப் பணியில் இணைத்துக் கொள்ளும் பிட்டன் போன்ற நாடுகளிடம் இருந்து நஷ்டஈடு கோர வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சுடன் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி தெரிவித்துள்ளவை வருமாறு-

பிரிட்டன் போன்ற நாடுகளில் உள்ள வைத்தியர்கள் வெளியேறி வருகின்றனர். இதனால் அந்த நாடுகள் இலங்கையில் இருந்து வைத்தியர்களை இணைத்துக் கொள்ள நிர்ப்பந்திக்கின்றனர்.

இது காலநிலை மாற்றத்தில் நமக்கு ஏற்படும் இழப்பு மற்றும் சேதம் போன்றது. பிரிட்டன் போன்ற நாடுகளில் வைத்தியர்கள் வெளியேறுகிறார்கள், அது எங்கள் தவறு அல்ல. ஒன்று அவர்களின் முறையை மாற்றி தங்களுடைய வைத்தியர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும் அல்லது அதற்கான இழப்பீடுகளை எங்களுக்குக் கொடுங்கள்.

இதேபோன்று வேறு சில வெளிநாடுகளும் இலங்கை வைத்தியர்களை ஆட்சேர்ப்பு செய்வதை உலக சுகாதார அமைப்பு கேள்வி எழுப்ப வேண்டும்.

தற்போதைய மருத்துவ கட்டளைச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து, அதன் மூலம் சிறந்த சுகாதார சேவையை வழங்குதல் மற்றும் மக்களின் நல்வாழ்வைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் ஆறு மாதங்களுக்குள் புதிய வைத்திய சட்டத்தை உருவாக்குமாறு இதன்போது ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

சுகாதாரச் செயலாளர், சட்ட வரைவாளகளைக் கொண்ட உயர்மட்டக் குழு, மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் விதிகளை ஆய்வு செய்வதற்கும், பொருத்தமான ஏற்பாடுகளுடன் புதிய மருத்துவச் சட்டத்தை உருவாக்குவதற்கும் நியமிக்கப்பட்டுள்ளது.

உடனடி வைத்திய தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு, சுகாதார அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் மருத்துவப் பொருள்களுக்கு 30 பில்லியன் அனுமதிக்கப்பட்டுள்ளது. இது அடுத்த மூன்று மாதங்களுக்கு போதுமானது.-என்றார்.

இதன்போது மருந்து விநியோகம் மற்றும் சரக்கு முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சந்திப்பின் போது உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கிடைக்கக்கூடிய மருந்துகள் மற்றும் அவற்றின் விநியோகம் குறித்த தகவல்களை வழங்க இணைய அடிப்படையிலான அமைப்பின் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன, சுகாதார அமைச்சர் வைத்தியர் கெஹலிய ரம்புக்வெல்ல, ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி மற்றும் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் ஈ.எம்.எஸ்.பி. ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ். ஜனக ஸ்ரீ சந்திரகுப்த, சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன, சுகாதார அதிகாரிகள் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# கல்கமுவ பிரதேசத்தில் மாணவி சடலமாக மீட்பு

கொழும்பு, ஓக.05

கல்கமுவ பிரதேசத்தில் 15 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காதல் முறிவு காரணமாக சிறுமி இந்த முடிவை எடுத்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உஸ்கல சியம்பலங்காமுவ கல்கமுவ பிரதேசத்தைதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த மாணவி சில வாரங்களுக்கு முன்னர் மாணவன் ஒருவருடன் வீட்டை விட்டு சென்றுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய குறித்த மாணவனை பொலிஸார் கைது செய்து சிறுவர் சீர்த்திருந்த கல்லூரிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த நிலையில் சம்பவத்தின் பின்னர் வீடு திரும்பிய சிறுமி விபரீத முடிவை எடுத்துள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டம் வவுனியாவில் 16 இடங்களில் ஆரம்பம்



வவுனியா காத்தார் சின்னக்குளத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டத்தை நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்தா ஆரம்பித்து வைத்துள்ளார்.

இலங்கையிலே சிறுநீரக நோயால் அதிகம் பாதிக்கப்படும் இரண்டாவது மாவட்டமாக வவுனியா மாவட்டம் காணப்படுகின்றது. இதனை கருத்தில் கொண்டு நனோ சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணணீர் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தில 16 கிராமங்களில் இந்தத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சுத்திகரிப்பு நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன், மாவட்ட செயலாளர் எஸ். சரத்சந்திர, பிரதேச செயலாளர் நா.கமலதாசன் மற்றும் அரச உயர் அதிகாரிகள் மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## தலைமன்னார்...

பியர் மற்றும் தலைமன்னார் பழைய பாலம் ஆகியவற்றிற்கு விஜயம் மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின் போது, வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் , மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீபன், சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் செயலாளர்கள், கடற்படை அதிகாரிகள், இந்திய நலன்புரியாளர் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது அமைச்சருடன் கலந்து கொண்டோர் தலைமன்னார் பியர் மற்றும் தலைமன்னார் பழைய பாலம் ஆகியவற்றை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். தலைமன்னார் பியர் கடற்படையின் கேட்போர் கூடத்தில் அமைச்சர் அதிகாரிகளுடன் ஒரு கலந்துரையாடலையும் மேற்கொண்டார்.

தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவை தொடர்பாக இரு பகுதிகளை அவர் இங்கு சுட்டிக்காட்டினார். ஒன்று உடனடி அபிவிருத்தித் திட்டம். அடுத்து நீண்ட காலத்திற்கு செய்யும் திட்டங்களை அவர் வலியுறுத்தினார்.

மூன்று மாதங்களுக்குள் குறுகிய திட்டத்தை நிறைவு செய்து தலைமன்னார் – இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பித்து, மக்கள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பிரயாணம் செய்வதற்கான நடவடிக்கையை உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும் என அங்க அவர் வலியுறுத்தியுள்ளார்.

(மற்றொரு செய்தி 7 ஆம் பக்கத்தில்)

## மலையக...

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகியவற்றின் எம்.பிக்களும், அரசுக்கு ஆதரவு வழங்கியுள்ள அரவிந்தகுமார் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. வடிவேல் சுரேஷ் ஆகியோரும் இச்சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

மலையக அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் உரிமைசார் விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

மலையகப் பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டுக்காக முந்நூறு கோடி ரூபாவை வழங்குவதற்கு இந்திய அரசு முன்வந்துள்ளது.

இந்த நிதியை எந்தெந்தத் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பானகட்சிகளின் யோசனைகள் என்ன என்பன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளது.

அனைத்து மலையகப் பிரதிநிதிகளையும் ஒரே தடவையில் சந்திக்குமாறு, ஜனாதிபதியிடம் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## கெஹலியவை...

என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின்போது, "அமைச்சுப் பதவியில் இருந்து விலகுமாறு ஜனாதிபதி உங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளனவே" – என எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே கெஹலிய இவ்வாறு கூறினார்.

"இல்லை, எனது குடும்ப உறுப்பினர் தான் இந்தக் கோரிக்கையை விடுத்தனர். ஆனால் விமர்சனங்களை எதிர்கொண்டவாறு சவால்களைச் சந்திப்பேன் எனக் கூறியுள்ளேன். பல பொறுப்புகளை வகித்தவன் நான். எனவே, சவால்களை கண்டு ஓட முடியாது. அவற்றை எதிர்கொள்ள வேண்டும். குடும்பத்தாரை என்னால் சமாளிக்க முடியும். வெளித்தரப்பில் இருந்து அவ்வாறானதொரு கோரிக்கை விடுக்கப்படவில்லை:" – எனவும் கெஹலிய குறிப்பிட்டார்.

---

## பல்கலை...

தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் போது தொல்லியல் திணைக்களத்திற்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன. அதைக் குறிக்கும் பதாகைகளையும் போராட்டகாரர்கள் தாங்கியிருந்தனர்.

போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், மத குருமார்கள், சைவ அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புகளைச் சேர்ந்தோர், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்

---

## காரில்...

பிரதேசத்தை சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது. அவர் சிகிச்சைக்காக கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டமைக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை. தப்பிச் சென்ற சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை வெலிவேரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# 450 மில்லியன் ரூபா இந்திய நிதி இலங்கைக்கு மானியமாக வந்தது

## இந்தியத் தூதுவர் நேற்றுக் கையளிப்பு



கொழும்பு, ஓக.05

இலங்கை அரசு எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளைத் தணிக்கும் வகையில் இந்தியா தக்க நேரத்தில் உதவிகளை புரிந்து வருகிறது. இதனால் இலங்கை நெருக்கடி நிலையிலிருந்து ஓரளவு மீட்சி பெற்று வருகிறது.

இந்த நிலையில் தற்போதும் 450 மில்லியன் ரூபா இந்திய நிதியை இலங்கைக்கு மானியமாக இந்திய அரசு வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியை கையளித்த இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே கையளித்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் டிஜிட்டல் மயமாக்கலின் அடிப்படை அடித்தளமான இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாள அட்டைத் திட்டத்தை துரிதமாக நடைமுறைப் படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று (04.08.2023) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது. இதன் போது, இந்திய தூதுவர் இலங்கைக் கான நிதி மானியத்தை வழங்கியுள்ளார்

# வெளிநாடுகளுக்குச் செல்லும் வைத்தியர்கள்: இங்குள்ள ஆஸ்பத்திரிகளில் வெற்றிடங்கள்

## வைத்திய நிபுணர்களை நியமிப்பதில் பெரும்பாடு என்கிறார் சத்தியமூர்த்தி



முல்லைத்தீவு, ஓக.05

முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் வைத்திய நிபுணர்கள் இல்லாமை ஒரு குறையாக உள்ளது. பொருளாதார நெருக்கடிகளால் இலங்கையில் உள்ள வைத்திய நிபுணர்கள் அதிகம் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டார்கள். இதனால் இங்குள்ள வெற்றிடங்களை நிரப்புவது பெரும் பாடாக உள்ளது.

இவ்வாறு வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கருத்து தெரிவித்தபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் தெரிவிக்கையில்–

முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் நிரந்தர வைத்திய நிபுணர்கள் இல்லாமை ஒரு குறையாக உள்ளது. குறிப்பாகப் பொருளாதார நெருக்கடிகளால் இலங்கையில் உள்ள வைத்திய நிபுணர்கள் அதிகம் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டார்கள்.

இறுதியாக நடைபெற்ற கலந்துரையாடலில் இரண்டு வைத்தியசாலைகளுக்கும் இரண்டு வைத்தியர்களையாவது நியமிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. அதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் சுகாதார அமைச்சரும் இருந்தார்.

அதனை நாங்கள் தற்போது தொடர்ந்து கேட்கின்றோம், எதிர்வரும் காலத்தில் நிரந்தர வைத்திய நிபுணர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

விஷேட ஆளணி எங்களுக்கு தேவையாக உள்ளது, நிதி அமைச்சு புதிய ஆளணியை நியமிக்காத ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது.

முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை – விரைவில் தீர்க்கப்பட வேண்டும் .

உள்ளக கட்டமைப்பிலும் விரைவான அபிவிருத்தி தேவையாகவுள்ளது, அதற்கு திட்டம் ஏதாவது இருந்தால் மேற்கொள்ள வேண்டும். முல்லைத்தீவு வைத்தியசாலையில் காணி பிரச்சினை தாமதமானதால் பெரிய கட்டட வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை.

அதேபோல் மன்னாரிலும் சீரி ஸ்கான் வந்து திரும்பி போனதால் பிரச்சினை இருந்தது. அங்கும் நிரந்தர வைத்திய பணிப்பாளர் இல்லாமையால் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. அதேசமயம் உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி இன்மையும் குறைபாடாகவே உள்ளது. விரைவில் இந்தப் பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்படும்.– என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நீதிமன்றுக்கு அச்சுறுத்தல்

அரச நிதி நிர்வாகம் தொடர்பான அதிகாரம் நாடாளுமன்றத்திடம் மட்டுமே உள்ளது. எனவே உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் நாடாளுமன்றத்தைத் தவிர, வேறு எவருடைய யோசனைகளையோ அல்லது நிபந்தனைகளையோ ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று கொழும்பில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இந்த விவகாரத்தை ஒட்டிய சர்ச்சை உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருக்கையில், அரசின் உத்தேச திட்டத்திற்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகையில், வேறு எவருடைய யோசனைகளையோ அல்லது நிபந்தனைகளையோ ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று ஜனாதிபதி அறிவித்திருக்கின்றமை உயர் நீதிமன்றத்திற்கு மறைமுகமாக அச்சுறுத்தல் விடும் எத்தனம் என்று விமர்சிக்கப்படுகிறது.

உள்நாட்டைப் பொறுத்தவரை பல்வேறு தரப்புகளிடமும் அரசு கடன் பெற்றிருக்கின்றது. பிணைமுறி என்ற பெயரில் தனிப்பட்டவர்களிடம் அநியாய வட்டி வீதத்துக்கு அரசு கடனை வாங்கிக் குவித்திருக்கிறது. சில நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து 30 வீத வட்டிக்குக் கூட கடன் பெற்றிருக்கின்றது அரசு.

எனினும், அரசின் தற்போதைய உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்திலே அத்தகைய கடன் எதற்கும் வேட்டு வைக்கப்படவில்லை. பாதிப்பு ஏற்படுத்தப்படவில்லை. அந்தக் கடன் எல்லாம் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு உறுதியளித்தபடி, அப்படி அப்படியே, மீளளிக்கப்படவிருக்கின்றன.

ஆனால் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்ற சமூக சேவை நிதிகளில் இருந்து அரசு பெற்ற கடன்களில்தான் கடன் மறுசீரமைப்பு என்ற பெயரில் பெரிய ஆப்பு வைத்திருக்கின்றது அரசு.

அதாவது, உத்தேச திட்டத்தின்படி அரசுக்கு சுமார் 30 சதவீத வட்டிக் கணக்கில் கடன் வழங்கிய பெரிய முதலாளிகளுக்கு அக்கடனில் எந்தப் பாதிப்போ, பின்னடைவோ, கால நீடிப்போ இன்றி குறித்த சமயத்தில் முழுமையாக அது மீளளிக்கப்படும்.

ஆனால், சுமார் 25 லட்சம் ஊழியர்களை அங்கத்தவராக கொண்ட ஊழியர் சேமலாப நிதியம் போன்றவற்றின் கணக்கில் கடன் மறுசீரமைப்பு என்ற பெயரில் பெரும் வெட்டு விழுந்திருக்கின்றது.

உதாரணத்திற்கு ஊழியர் சேமலாப நிதியத்தில் வைப்பிலிட்டிருக்கும் ஓர் ஊழியர் 2038 ஆம் ஆண்டில் தமது சோமலாப நிதியைப் பெறுவார் எனில் (அதுதான் மறுசீரமைப்புக் கால எல்லை), அந்த நிதியை அவர் சாதாரணமாக வெளியே முதலிட்டு அவர் பெறக்கூடிய தொகையில் ஆக மூன்றில் ஒன்றைத்தான் தமது சேவை மூப்பிற்கான ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து அவர் அப்போது பெற முடியும். அவ்வளவு தூரத்திற்கு அந்தக் கொடுப்பனவில் தன்பாட்டில் மறுசீரமைப்பு என்ற பெயரில் கயிறு விட்டிருக்கின்றது அரசு.

அதாவது கடன் சுமையின் பாதிப்பை அப்பாவி ஊழியர்களின் சேமலாப நிதியத்தின் சேமிப்பு மூலம் சூறையாடும் ரணிலின் அரசு, கொழுத்த முதலாளிகளின் பிணைமுறிக் கடன்கள் போன்றவற்றை உரிய கடப்பாட்டின்படி அவற்றை மீளளிக்கப் போகின்றது.

இத்தகைய மோசமான அணுகுமுறைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பில் அடுத்த வாரத்துக்குள் காத்திரமான இடைக்கால உத்தரவு ஒன்றை உயர்நீதிமன்றம் விடுக்க கூடிய சாத்தியம் இருக்கையில், நாடாளுமன்றம் தவிர்ந்த வேறு எவரின் யோசனைகளையோ நிபந்தனைகளையோ ஏற்றுக்கொள்ள மாட்டோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்.

ஒரு வகையில் இது, இவ்விடயத்தைக் கையாளும் உயர்நீதிமன்றத்திற்கு கொடுக்கப்பட்ட அச்சுறுத்தல் சவாலாகவே கருதப்படலாம்.

## டிஜிட்டல் அடையாள அட்டைத் திட்டத்தை துரிதமாக்க இந்திய-இலங்கைக் குழு முடிவு



கொழும்பு, ஓக.05

நாட்டில் டிஜிட்டல் மயமாக்கலின் அடிப்படை அடித்தளமான இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாள அட்டைத் திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்த இந்திய – இலங்கை திட்டக் கண்காணிப்பு குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று (04.08.2023) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கேள்விப் பத்திரம் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது. உரிய கால வரையறையின் படி அவை பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று இதன்போது குறிப்பிடப்பட்டுள்ளது.

உரிய கால வரையறைக்கமைய இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும், வாரத்துக்கு ஒருமுறை கூடி அதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யுமாறும் சாகல ரத்நாயக்க, அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இந்திய – இலங்கை ஒத்துழைப்பின் கீழ் செயற்படுத்தப்படும் இந்தத் திட்டம், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நடவடிக்கையில் மிகவும் முக்கியமானது. இதற்காக இந்திய அரசு வழங்கும் ஆதரவுக்கு நன்றி என்று சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முதல் செயலாளர் எம்.எல்டோஸ் மெதிவ், தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் பேராசிரியர் எம்.டி. குணவர்தன, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, ஜனாதிபதி செயலக மேலதிக செயலாளர் கலாநிதி சுலக்சன ஜயவர்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விவசாயத்தைத் தடை செய்தால் உணவுத் தட்டுப்பாடும் நிலவும்



கொழும்பு, ஓக.05

மின் உற்பத்தியை விடவும் உணவு உற்பத்தி மிகவும் முக்கியமானது. இதனை அதிகாரிகள் விளங்கிக் கொள்ள வேண்டும் . உணவு உற்பத்தியில் தடை ஏற்படுமேயானால் எதிர்வரும் காலங்களில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும்.

இவ்வாறு விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வரட்சியான காலநிலைக்கு மத்தியில் விவசாய நிலங்களுக்கான நீர்ப்பாய்ச்சல் முடக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் விவசாயத்தில் பெரும் பாதிப்பு ஏற்படும். இதனால் எதில்வரும் காலங்களில் அரசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறான தாக்கங்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் எதிர்காலங்களில் நாடுகளுக்கு இடையிலான உணவு ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் மட்டுப்படுத்தப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# ஆயிரத்து 800 மில். ரூபா செலவில் தலைமன்னார் இறங்குதுறை திருத்தம்

மன்னார், ஓக.05

1800 மில்லியன் ரூபா செலவில் தலைமன்னார் இறங்குதுறை புனரமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

இலங்கை – இந்திய கப்பல் சேவையை மீள ஆரம் பிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாகத் தலை மன்னார் இறங்குதுறை புனரமைக்கப்படவுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளளது.

37 வருடங்களின் பின்னர் 1800 மில்லியன் ரூபா செலவில் இறங்குதுறை புனரமைக்கப்படவுள்ளது என்று துறைமுகங்கள், கப்பல்துறை, விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

புனரமைக்கப்படவுள்ள தலைமன்னார் இறங்கு துறையை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

# இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை நுகர்வோருக்கு வழங்க நடவடிக்கை



கொழும்பு, ஓக.05

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து முட்டைகளையும் நுகர்வோருக்கு வழங்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அரச வணிக பல் வேறு கூட்டுத்தாபனம் வலியுறுத்துகிறது.

நாளாந்தம் ஒரு மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்படுகிறது என்று அதன் தலைவர் ஆசிரி வலிசுந்தர குறிப்பிடுகின்றார்.

எனினும், அந்த முட்டைகளை பேக்கரிகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு வழங்க முடியாது என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

லங்கா சதொச ஊடாக தினமும் ஒரு மில்லியன் முட்டைகள் விநியோகிக்கப்படுவதாக அவர் குறிப்பிடு கின்றார்.

அடுத்த வாரத்துக்குள் அனைத்து பல்பொருள் அங் காடிகளுக்கும் பொதி செய்யப்பட்ட முட்டைகளை விநி யோகிக்கும் விசேட வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டுள்ளது என்று ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார்.

பல்பொருள் அங்காடிகளில் விற்கப்படும் பொதி செய்யப்பட்ட முட்டை ஒன்றின் விலை 42 ரூபா எனவும் அவர் குறிப்பிட்டார்.

# நுவரெலியா மலைகளில் ஏறுவதற்கு கொண்டுவரப்பட்டது தடைச் சட்டம்



நுவரெலியா மாவட்டத்தில் அமைந் துள்ள வனவிலங்குகள் மற்றும் வனப் பாதுகாப்பு காப்பகங்களுக்குள் செல்வது, அங்கு உள்ள மலைகளில் ஏறுவது மற்றும் முகாமிடுவது ஆகிய செயற்பாடுகளுக்கு முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று (04) முதல் இந்த தடை உத் தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று நுவ ரெலியா மாவட்டச் செயலாளர் நந்தன கலபட தெரிவித்துள்ளார்.

அண்மையில் தலவாக்கலை கிரேட் வெஸ்டர்ன் மலை உச்சியில் பெண் ணின் சடலம் மீட்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது அவர் கூறினார்.

இது தொடர்பில் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் வனஜீவராசிகள் உத்தி யோகத்தர்கள் மற்றும் வன பாது காப்பு திணைக்கள அதிகாரிகளுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள மலைகளை யாரேனும் பார்வையிடவோ அல்லது ஏறவோ விரும்பினால் அதற்கு முன்னதாக குறித்த மலைப்பகுதிகள் யாருடைய எல்லைக்குள் வருகிறதோ அந்த அரசு நிறுவனங்களிடம் அனுமதி பெற வேண்டும்.

மக்கள் அருகில் உள்ள காவல் நிலையத்தில் ஒப்புதல் சமர்ப்பித்து, சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் செல்ல அவர்களிடம் அனுமதி பெற வேண்டும்.

பயணத்தின் முடிவில், தங்கள் சுற்றுப் பயணம் பாதுகாப்பாகவும் சிறப்பாக வும் முடிந்ததாக காவல் நிலையத்துக் குத் தெரியப்படுத்த வேண்டும்.

நேரில் சென்று கூறமுடியா விட்டால் அழைப்பை மேற்கொண்டா வது தெரியப்படுத்த வேண்டும் என்று புதிய சட்ட ஒழுங்குகள் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது.

உரிய அனுமதிகள் இன்றி வனப் பாதுகாப்புப் பகுதிகளுக்குள் நுழை யும் தனிநபர்கள் மற்றும் குழுக்க ளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக் கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

# நாட்டைக் கட்டியெழுப்ப புதிய அரசு அவசியம்

## தேசிய மக்கள் சக்தியின் லால்காந்த தெரிவிப்பு

கொழும்பு, ஓக.05

நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றால் தேர்தல் நடத்தப்பட்டு புதிய அரசு அமைக்கப்பட வேண்டும், என்று தேசிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினர் கே.டி.லால்காந்த கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாட்டில் பல பிரச்சினைகள் காணப் படுகின்றன. மக்கள் தமது ஜீவனோ–பாயத்துக்காகப் பல இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர்.

நாட்டின் அரசியல் சீர்குலைந்து காணப்படுகிறது எனவே நாட்டின் அரசியலில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.

மக்கள் இப்போது தேர்தல் இடம்பெற வேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்த நிலையில் ஆட்சியாளர்கள் தேர்தலை நடத்தாமல் பலவந்தமாக ஆட்சியில் இருக்க முயற்சிக்கிறார்கள்.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டும், தேவையேற்படின் அனைத் துத் தேர்தல்களையும் ஒன்றாக நடத் தினாலும் நன்றுதான். கடினமாக நகர்ந்து செல்லும் மக்களின் வாழ்க்கை முறையை செயற்படுத்த புதிய அரசை அமைக்க வேண்டியது கட்டாயம்.

அரசியலில் உள்ள எதிரிகள்,மக் கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தி மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்துஎங்களை ஆட்சிக்கு வரவிடாமல் தடுக்கின்ற னர்.–என்றார்.



# ஐ. தே. கவின் 77 ஆவது மாநாடு: பிரமாண்டமாக நடத்த ஏற்பாடு



## விசேட குழு நியமனம்

கொழும்பு, ஓக.05

ஐக்கிய தேசியக் கட்சியின் 77 ஆவது மாநாடு செப்டெம்பர் 10 ஆம் திகதி நடை பெறவுள்ள நிலையில், இதற்கான நிகழ்வுகளைப் பிரமாண்டமாக நடத்து வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காகக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தலைமையில் 14 பேர் அடங்கிய முகாமைத்துவ குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார, பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன, உப தலைவர் அகிலவி ராஜ் காரியவசம், தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க, செயற்குழு உறுப் பினர்களான ஹறின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, ரவி கருணா நாயக்க உள்ளிட்டோர் இந்தக் குழுவில் இடம்பிடித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு விழா மற்றும் மாநாட்டை நடத்துவ தற்கான ஏற்பாடுகளை இந்தக் குழு முன்னெடுக்கும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

# மன்னார் கடற்கரையில் சடலம் அடையாளம் காண கோரிக்கை

மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள இராணுவ சோதனைச் சாவடிக்கு சற்று தொலைவில் உள்ள கடற்கரை பகுதியில் கடந்த 2 ஆம் திகதி ஆண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

சடலத்தை அடையாளம் காண மன்னார் பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

உயிரிழந்தவர் சுமார் 30 தொடக் கம் 50 வயது மதிக்கத்தக்க 4.8 அடி உயரம் கொண்ட ஆண் எனவும், கருப்பு நிற நீள கை சேட், கருப்பு நிற அரைக் காற்சட்டை மட்டும் நீல நிற பெட்டி சாரம் அணிந்துள்ளார் என்றும் மன் னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் தொடர்பான தகவல் தெரிந்த வர்கள் அல்லது அடையாளம் காண விரும்புபவர்கள் மன்னார் பொலிஸ் நிலையம் அல்லது மன்னார் மாவட்ட பொதுவைத்தியசாலையுடன்தொடர்பை ஏற்படுத்துமாறு மன்னார் பொலி ஸார் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.






# காஷ்மீர் கறுப்பு தினத்தை ஒட்டி இன்று கொழும்பில் கவனவீர்ப்புப் போராட்டம்

**(நூருல் ஹுதா உமர்)**

காஷ்மீர் விடுதலைக்கான அமைப்பின் ஏற்பாட்டில் காஷ்மீர் கறுப்பு தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்புக் காரியாலயத்தின் முன்னாலும், இலங்கைக்கான இந்திய தூதரக முன்றிலிலும் இன்று சனிக் கிழமை கவனவீர்ப்புப் போராட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு மாநகர சபை ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் சார்பிலான மாநகர சபை முன்னாள் உறுப்பினர் கலீலுர் ரஹ்மான், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் முஸம்மில் ஆகியோ ரின் ஏற்பாட்டிலும் தலைமையிலும் காஷ்மீர் விடுதலைக்கான அமைப்பி னர் பதாதைகளை ஏந்திக் கொண்டு இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெறும் அட்டூழியங்களையும், ஆக்கிரமிப்புப் படைகள் அப்பாவி காஷ்மீரிகளை மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவதையும் இவர்கள் தமது பதாதைகளில் சுட்டிக் காட்டி யிருந்தனர். ஐக்கிய நாடுகள் சபையும் ஐ.நா. மனித உரிமை அமைப்பும் இவ்விடயத்தில் தலையிட்டு இரு நாடு களுக்கிடையிலான முரண்பாடுகளை தீர்த்து வைக்க வேண்டும், சட்டவிரோத ஆக்கிரமிப்புக்கு எதிராக காஷ்மீரிக ளின் சுயநிர்ணய உரிமைக்கான நியாயமான போராட்டத்திற்க்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதுடன் காஷ்மீர் மக்களின் நிரந்தர துயரங்களை நோக்கி உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும், காஷ்மீர் மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப காஷ்மீர் பிரச்சினைக்கு ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களின் அடிப்படையில் தீர்வு காண்பதை வலியுறுத்துவதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஏழு தசாப்தங்களாக ஆக்கிர மிப்புப் படைகள் சட்ட விரோதமாக ஆக்கிரமித்துள்ள ஜம்மு மற்றும் காஷ்மீரில் செய்த மனித உரிமை மீறல்களை கண்டித்த அவர்கள், காஷ்மீர் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப காஷ்மீரில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் பொது வாக்கெடுப்பு நடத் தப்படுவதை உறுதி செய்ய உலக நாடுகளும் கடமைப்பட்டுள்ளது என மேலும் குறிப்பிட்டனர்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் கலீலுர் ரஹ்மான், இந் தியா முற்போக்கான சிந்தனையுடன் செயற்படவேண்டும். இலங்கை அரசாங் கத்திற்கு ஜனநாயகத்தை கற்றுக் கொடுப்பது போன்று எண்ணி வடக்கு கிழக்கு மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று வலியுறுத் தும் இந்தியா தனது மக்கள் 40 வருடங்களாக காஷ்மீரில் படும் இன்னல்களுக்கு ஜனநாயத்தை அமுல்படுத்த தயங்குவது ஏன்? மனிதாபிமானமில்லாத அடக்கு முறையை உலகில் சந்திக்கும் இடங்க ளான காஷ்மீரின் விடுதலைக்கும், பலஸ்தீன விடுதலைக்கும் நாங்கள் தொடர்ந்தும் குரல்கொடுத்து வருகின் றோம். இனவாதத்தை விதைத்தோரே உலக பூகோள அரசியலில் இனவாத கோரமுகங்களின் பாதிப்புக்களை சந்தித்து வருவதை நாம் காண லாம். – என்றார்













# மணிப்பூரில் கலவரம் மீண்டும் வெடித்தது!

## 3 பேர் சுட்டுக்கொலை தொடரும் ஊரடங்கு

மணிப்பூரில் வெள்ளிக்கிழமை இரவு மீண்டும் புதிதாக வெடித்தக் கலவரத்தில் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

உயிரிழந்தவர்கள் மூவரும் மைத் தேயி சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர். இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக குகி சமூகத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. க்வாக்டா பகுதியில் தான் இந்தக் கலவரம் நடந் துள்ளது.

கலவரத்தால் ஊரடங்கு தளர்த்தப்பட்ட பல்வேறு பகுதிகளிலும் மீண்டும் ஊர டங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. குறிப் பாக இம்பால் கிழக்கு மற்றும் இம்பால் மேற்கு பகுதிகளில்தளர்த்தப்பட்ட ஊரடங்கு மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து பிஷ்ணுபூர் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கையில்,

மத்தியப் படைகளின் பாதுகாப்பு வளையத்தில் இருந்த பாதுகாப்புப் பகுதி யில் இருந்து 2 கிலோ மீற்றர் தொலை வில் இருக்கும் குவாக்டா பகுதிக்குள் கலவரக்காரர்கள் நுழைந்தனர்.

பாதுகாக்கப்பட்ட பகுதியைத் தாண்டி வந்த சிலர் மைத்தேயி மக்கள் வசிக் கும் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தி யதைத் தொடர்ந்து மீண்டும் கலவரம் மூண்டுள்ளது. இதில் மைத்தேயி சமூகத்தைச் சேர்ந்த மூன்று பேர் கொல் லப்பட்டனர். குகி சமூகத்தினர் வீடுகள் பல எரிக்கப்பட்டுள்ளன. சம்பவ பகுதி யில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணிப்பூரின் பிஷ்ணுபூர் மாவட்டத் தில் கடந்த வியாழக்கிழமையன்று ஆயுதப் படைகளுக்கும் மைத்தேயி சமூகத்தின ருக்கும் இடையே இரண்டு நாள்களுக்கு முன்னர் நடந்த மோதலில் 17 பேர் காய மடைந்தனர். இந்த நிலையில் நேற்று வெடித்த கலவரத்தில் 3 பேர் கொல் லப்பட்டுள்ளனர். இதுதவிர கங்வாய், போக் சாவ் பகுதிகளில் ஏற்பட்ட கலவரங்களை அடக்கப் பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர். மைத்தேயி சமூகப் பெண்கள் சோதனைச் சாவடியைத் தாண்டிய நுழைய முயன்ற தால் பாதுகாப்புப் படையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசி தாக்குதல் நடத் தினர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமித் ஷாவுக்கு முதல்வர் எச்சரிக்கை!

1965 ஆம் ஆண்டு மொழிப்புரட்சிக் காலத்தை மீண்டும் உருவாக்கி விடாதீர்கள் என்று உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டா லின் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

எதிர்ப்பின்றி அனைவரும் இந்தியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் பேச்சு மற்ற மொழி பேசும் அனைத்து இன மக்களையும் இந்திக்குக் கொத்தடிமை ஆக்கும் எதேச்சாதிகார முயற்சியாகும். இதைக் கேட்டு நடக்க தமிழகம் தலையாட்டி பொம்மை மாநிலம் அல்ல.

தமிழகத்துக்கு வந்தால் தொன்மை யான மொழி என்று நாக்கில் தேன் தடவுவதும், டில்லிக்குச் சென்றதும் நஞ்சைப் பரப்புவதும் பா.ஜ.கவின் பசப்பு அரசியல் என்பதை அனைவரும் அறிவோம். இந்தித் திணிப்பை இப்போது மேற்கு வங்கமும், கர்நாடகமும் எனப் பல மாநிலங்களும் கடுமையாக எதிர்க்கத் தொடங்கி இருப்பதை அமித் ஷா உணர வேண்டும். 1965 மொழிப்புரட்சிக் காலத்தை மீண்டும் உருவாக்கி விடாதீர்கள் என எச்சரிக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# அ.தி.மு.க. மதுரை மாநாட்டில் பங்கேற்க மோடிக்கு அழைப்பு!




## - பழனிசாமி தரப்பு ஆலோசனை

மதுரையில் நடைபெற உள்ள அ.தி.மு.க. மாநாட்டுக்கு பிரதமர் மோடியை அழைப்பது தொடர்பாக பழனி சாமி தரப்பினர் ஆலோசனை நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

மதுரையில் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெற உள்ள அ.தி.மு.க. மாநில மாநாட்டுக்கான ஏற்பாடுகளை மாவட்டச் செயலாளர்கள் செல்லூர் ராஜா, வி.வி. ராஜன் செல்லப்பா, ஆர்.பி.உதயகுமார் உள்ளிட்டோர் செய்து வருகின்றனர்.

பழனிசாமிக்கு தென் மாவட்டங்களில் போதிய செல்வாக்கு இல்லை என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் கூறி வரும் நிலையில், தங்கள் செல்வாக்கை நிரூபிப்பதற்காக இந்த மாநாடு நடத்தப்படுவதாக அ.தி.மு.கவினர் தெரிவிக்கின்றனர்.

தேர்தல் ஆணையம் அ.தி.மு.க. பொதுச் செயலாளராக பழனிசாமியை அங்கீகரித்துள்ள நிலையில், கூடுதல் உற்சாகத்துடன் மாநாட்டு ஏற்பாடுகளை கட்சியினர் மேற்கொண்டு வருகின்றனர். தமிழகம் முழுவதுமிருந்து மாவட்டத்துக்கு 15 ஆயிரம் பேரை அழைத்து வருமாறு நிர்வாகிகளுக்கு கட்சித் தலைமை உத்தரவிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில், இந்த மாநாட்டை முறியடிக்கும் வகையில் ஓ.பன்னீர் செல்வமும், அ.ம.மு.க. பொதுச் செயலா ளர் டிடிவி.தினகரனும் இணைந்து செயல்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், இந்த மாநாட்டுக்கு பா.ஜ.க. சார்பில் பிரதமர் மோடியை அழைக்கலாமா என்றும் ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

# இம்ரான் கானுக்கு சிறைத் தண்டனை!



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவர் மீதான ஊழல் குற்றச்சாட்டு குறித்த வழக்கு இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நீதிமன்றம் இம்ரான் கானுக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

அத்துடன் அவர் 5 ஆண்டுகள் அரசியலில் ஈடுபடுவதற்கும் தடைவிதிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனியின் ஆயுதப் படைக்கு ஆள்களைச் சேர்ப்பதில் சிக்கல் !



ஜேர்மனியின் ஆயுதப்படைகள் புதிய ஆள்களைச் சேர்ப்பதில் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சர் போரிஸ் பிஸ் டோரியஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு விண்ணப் பதாரர்கள் ஏழு சதவீதம் குறைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தில் பயிற்சியின் போது சுமார் 30 சதவீதமானவர்கள் வெளியேறுகிறார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

இராணுவத்தை ஆய்வு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள ஜேர்மன் நாடா ளுமன்ற ஆணையர், சில வீரர்களின் குடியிருப்புகளில் இணைய வசதி மற்றும் சுத்தமான கழிவறைகள் இல்லை என தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியின் இளைஞர்கள் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள சரிவு இராணுவ ஆட்சேர்ப்பையும் பாதித்துள்ளது எனவும் 2050 ஆம் ஆண்டில் 15-24 வயதுடையவர்களின் எண்ணிக்கை 12 சதவீதம் குறையும் என அவர் கூறியுள்ளார்.

ஆட்சேர்ப்புக்கு வரும்போது, இளைய தலைமுறையினர் கடந்த காலத்தை விட வேலை-வாழ்க்கை சமநிலையில் அதிக அக்கறை கொண்டுள்ளதாகவும், இராணுவ வாழ்க்கைக்கு ஏற்ப மாறுவது கடினமாக இருப்பதாகவும் பிஸ்டோரியஸ் தெரிவித்துள்ளார்.

# ஜோர்ஜியாவில் நிலச்சரிவு: 6 பேர் பலி!



மேற்கு ஜார்ஜியாவிற்கு அருகில் உள்ள ராச்சா பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனை அந்த நாட்டு உள்துறை அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

மீட்பு மற்றும் தேடல் நடவடிக்கைகளில் இதுவரை ஆறு சடலங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன என சமூக ஊடகத்தில் வெளியிட்ட ஓர் அறிக்கையின் வாயிலாக அமைச்சு இதனை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில்,140 பேர் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மேலும் இரு ஹெலிகப்டர்களும் மோப்ப நாய்களும் மீட்பு மற்றும் தேடல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரஷ்யாவின் எண்ணெய் கப்பல் மீது தாக்குதல்



கருங்கடலில் உக்ரைன் நடத்திய தாக்குதலில் 11 பணியாளர்களுடன் பயணித்த ரஷ்யாவின் எண்ணெய் கப்பல் ஒன்று சேதமடைந்துள்ளது என ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்–துள்ளனர்.

கெர்ச் ஜலசந்தியில் நேற்றிரவு நடத் தப்பட்ட இந்த தாக்குதலில் கப்பலின் இயந்திர அறை சேதமடைந் ததாக தெரிவிக்கப்படுகிறது.


இந்த தாக்குதலின் போது எவருக் கும் காயம் ஏற்படவில்லை எனவும் ரஷ்ய தரப்பினர் அறிவித் துள்ளனர்.

ரஷ்யாவின் கடல் போக்குவ ரத்து நிறுவனம் கிரிமியன் பாலத் திற்கு தெற்கே 17 மைல் தொலைவில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளது.

கடற்படையின் ஆளில்லா விமா னம் மூலம் இந்த தாக்குதல் நடத் தப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் உக்ரைன் இதுவரை பகிரங்கமாக கருத்துக்கள் எதுவும் தெரிவிக்கவில்லை.

அதேநேரம், கடந்த வெள்ளிக் கிழமையும் ரஷ்யாவின் கப்பல் ஒன்று தாக்குதலுக்கு இலக்கானமை குறிப் பிடத்தக்கது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949